10/=
பக்கங்கள் 08
Registered as a Newspaper in Srilanka
# எதிரொலி
Ethiroli
அதிர்வு 165 ஞாயிற்றுக்கிழமை நவம்பர் 05 2017 ethirolimedia@gmail.c... 48

## வலி.வடக்கில் இன்று பேரணி

வலி.வடக்கு, நவ.05

வசாவிளான், பலாலி தெற்கு ஆகிய பிரதேசங்களில் தம்மை மீளக் குடியமர்த்தக் கோரி, அந்தப் பகுதியைச் சேர்ந்த மக்களால் அமைதிப் பேரணி இன்று ஞாயிற்றுக்கிழமை நடத்தப்படவுள்ளது.

வசாவிளான் கிராம முன்னேற்றச் சங்கத்தில் இருந்து ஆரம்பமாகும் இந்தப் பேரணி, வசாவிளான் இராணுவக் குடியிருப்பு வரை செல்லும். அங்கு தம்மை மீளக்குடியமர அனுமதிக்குமாறு ஜனாதிபதிக்கு, யாழ். கட்டளைத் தளபதியூடாக மக்களால் மனு கொடுக்கப்படும். அத்துடன் யாழ்.மாவட்ட அரச அதிபர், வலி.வடக்கு பிரதேச 06▶

## மாவீரர் நாளில் வேட்புமனு

கொழும்பு, நவ.05

உள்ளூராட்சி சபைத் தேர்தலுக்கான வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ள நிலையில், எதிர்வரும் நவம்பர் 27ஆம் திகதி ( மாவீரர் நாள் ) முதல் வேட்புமனுக்களை ஏற்றுக்கொள்வதற்கான அறிவிப்பை வெளியிட தேர்தல்கள் ஆணையகம் தீர்மானித்துள்ளது.

அதன்படி மூன்றரை நாட்கள் வேட்புமனுக்களை ஏற்றுக்கொள்ளும் தினங்களாக அடையாளப்படுத்தப்பட்டுள்ளன. 27, 28, 29ஆம் திகதிகளுடன் 30ஆம் 06▶



## மாவையிடம் சி.ஐ.டி நேற்று விசாரணை

### அடுத்த இலக்கு சிறிதரன்!

யாழ்ப்பாணம், நவ.05

தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை.சேனாதிராசாவிடம் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் நேற்று வாக்கு மூலம் பெற்றனர்.

புங்குடுதீவு மாணவி வித்யா படுகொலை வழக்கின் சூத்திரதாரியான சுவிஸ்குமார் என அழைக்கப் படும் மகாலிங்கம் சசிக்குமாரை தடுப்புக் காவலிலிருந்து விடுவித்து உதவிய முன்னாள் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் லலித் ஜெயசிங்கவுக்கு எதிரான வழக்கு தொடர்பிலேயே நாடாளுமன்ற உறுப்பினர் மாவை .சேனாதிராஜாவிடம் வாக்குமூலம் பெறப்பட்டது. நேற்று நண்பகல் மாவிட்டபுரத்திலுள்ள அவரது வீட்டுக்குச் சென்ற குற்றப் புலனாய்வுப் பிரிவினர், அங்கு வைத்தே 06▶



## அமெரிக்க இராஜதந்திரி வருகிறார் இலங்கைக்கு

கொழும்பு, நவ.05

அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் அரசியல் விவகாரங்களுக்கான உதவிச் செயலர் தோமஸ் சானொன் நாளை திங்கட்கிழமை இலங்கைக்குப் பயணம் மேற்கொள்ளவுள்ளார். வோஷிங்டனில் உள்ள அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் பேச்சாளர் இந்தத் தகவலை வெளியிட்டுள்ளார்.

இன்று ஞாயிறு முதல் நாளை மறுதினம் செவ்வாய் வரை பங்களாதேஷ் மற்றும் இலங்கை ஆகிய நாடுகளுக்கான விஜயத்தை தோமஸ் சானொன் மேற்கொண்டுள்ளார். இன்று பங்களாதேஷ் செல்லும் அவர், அந்தப் பயணத்தை முடித்துக் கொண்டு நாளை கொழும்புக்குப் பயணம் மேற்கொள்வார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ)



## அரசியல் கைதிகளின் போராட்டம் முடிவு

### “பல்கலை மாணவர்களை நம்பியே இந்தத் தீர்மானம்”

யாழ்ப்பாணம், நவம்பர் 05

அனுராதபுரத்தில் தொடர் உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டுவந்த மூன்று தமிழ் அரசியல் கைதிகளும் தற்காலிகமாகத் தமது போராட்டத்தைக் கைவிட்டுள்ளனர்.உண்ணாவிரதத்தை மேற்கொண்டு வந்த அரசியல் கைதிகளுக்கு யாழ்.பல்கலைக்கழக மாணவர் பிரதிநிதிகள் கொடுத்த உறுதிமொழியை அடுத்தே இந்த முடிவுக்கு கைதிகள் வந்தனர்.

வடபகுதியைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்களான சிவசக்தி ஆனந்தன், அங்கஜன் இராமநாதன், வடமாகாண கல்வி அமைச்சர் சர்வேஸ்வரன், வடமாகாண சபை உறுப்பினர் சிவாஜிலிங்கம், அருட்தந்தை மா.சக்திவேல் மற்றும் அரசியல் கைதிகளின் உறவினர்கள் ஆகியோருடன் அனுராதபுரம் சிறைச்சாலைக்குச் சென்ற யாழ். 06▶

## கலையப் போகிறது தேசிய அமைச்சரவை



### ரணிலின் பதவியும் பறிபோகும்?

கொழும்பு, நவ.05

உள்ளூராட்சி சபைத் தேர்தலுக்கு முன்னர் மைத்திரி- ரணில் தலைமையிலான தேசிய அரசின் அமைச்சரவை கலைக்கப்படவுள்ளதாக நம்பகமான தகவல்கள் வெளியாகியுள்ளன.

2018ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத்திட்டம் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட பின்னர் இந்த மாற்றம் இடம்பெறும் எனத் தெரியவருகின்றது.பிணைமுறி மோசடி விசாரணை, உள்ளூராட்சி 06▶

## அரசியல் கைதிகளுக்காக உயிரையும் கொடுப்போம்



### சிவாஜிலிங்கம் சபதம்

யாழ்ப்பாணம், நவ.05

“அனுராதபுரம் சிறைச்சாலையில் உணவு தவிர்ப்பு போராட்டத்தை நடத்தி வந்த தமிழ் அரசியல் கைதிகள் 3 பேரும் தங்கள் போராட்டத்தை நிறைவுக்கு கொண்டு வந்திருக்கும் நிலையில், அவர்களுடைய கோரிக்கைகளை நிறைவேற்றுவதற்காக 06▶

## தமிழரசோடு பகை! கூட்டமைப்போடு உறவு!



### ஈ.பி.ஆர்.எல்.எவ் அறிவிப்பு

யாழ்ப்பாணம், நவ.05

“தமிழ் மக்கள் வழங்கிய ஆணைக்கு மாறாகப் பயணிக்கும் தமிழரசுக் கட்சியுடன் இனி இணைந்து செயற்படப் போவதில்லை . தமிழரசுக் கட்சியின் சின்னத்திலும் தேர்தலில் போட்டியிடப்போவதில்லை . எனினும் நாங்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை விட்டு 06▶

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மைக்காக உரத்து ஒலிக்கும் ஊடகக் குரல்



# மூழ்கியது சென்னை!

சென்னை,நவ.05

சென்னையில் பெய்து வரும் பலத்த மழை காரணமாகப் பல பகுதிகள் நீரில் மூழ்கியுள்ளன.

கடந்த 31 ஆம் திகதி முதல் பெய்து வரும் கடும் மழையால் சென்னை நகரில் உள்ள பாடசாலைகளுக்கு விடுமுறை வழங்கப்பட்டுள்ளது. அதேவேளை, அங்கு ஏற்பட்டுள்ள வெள்ளப் பெருக்கால் இதுவரை 8 பேர் உயிரிந்துள்ளனர் எனத் தமிழகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

வெள்ளப்பெருக்கால் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்குப் பாதுகாப்பு வழங்குவதற்காக 105 நிவாரண முகாம்கள் சென்னையில் அமைக்கப்பட்டுள்ளன. அத்துடன் நாகபட்டினத்திலும் பெய்து வரும் கடும் மழையால் பல வீடுகள் நீரில் மூழ்கியுள்ள நிலையில், ஆயிரக்காணக்கான வயல் நிலங்களும் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ளன. இதேவேளை 2015 ஆம் ஆண்டும் சென்னை வெள்ளத்தால் அதிகளவு பாதிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# பிரான்ஸில் நிர்வாண உணவகம்

பிரான்ஸ்,நவ.05

பிரான்ஸின் ஹார்வெல் நகரில் முதன்முறையாக நிர்வாண உணவகம் திறக்கப்பட்டுள்ளது.

ஓ நசுரல் எனப் பெயரிடப்பட்டுள்ள இந்த உணகவத்தில் நிர்வாணமாக உணவருந்தலாம்.

இங்கு 40 பேர் அமரும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளதுடன், உணவின் விலையாக 30 யூரோ நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இது மசாஜ் விடுதி கிடையாது என்றும், இவ்விருந்து தங்களுக்கு சந்தோஷத்தை அளிப்பதாகவும் விருந்தில் கலந்து கொண்டவர்கள் தெரிவித்துள்ளனர்.





# ஐ.எஸ்.ஐ.எஸ். மீது டிரம்ப் பாய்ச்சல்

வொஷிங்டன்,நவ.05

அமெரிக்கா மீது நடத்தப்படும் ஒவ்வொரு தாக்குதலுக்கும் ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பினர் மிகப் பெரிய விலையைக் கொடுக்க நேரிடும் என டிரம்ப் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

அமெரிக்காவில் உள்ள நியூயோர்க் நகரில் கடந்த 31ஆம் திகதி உஸ்பெகிஸ்தானைச் சேர்ந்த தீவிரவாதி சாய்புல்லோ சைபோவ் நடத்திய தாக்குதலில் 8 பேர் பரிதாபமாகக் கொல்லப்பட்டனர். மேலும் 11 பேர் படுகாயம் அடைந்தனர்.


இதற்கிடையே, நியூயோர்க்கில் நடைபெற்ற தாக்குதலுக்கு ஐ.எஸ்.அமைப்பினர் பொறுப்பேற்றுள்ளனர். இது தொடர்பாக ஐ.எஸ். ஆதரவு செய்திப் பத்திரிகை ஒன்று, “எங்கள் அமைப்பின் வீரர்களில் ஒருவர் நியூயோர்க் நகர வீதியில் தாக்குதல் நடத்திப் பலரைக் கொன்றுள்ளார்” எனக் குறிப்பிட்டுள்ளது.

இந்நிலையில், அமெரிக்க அதிபர் தனது ருவிட்டர் பக்கத்தில் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

அதில் அவர்,

“அமெரிக்காவில் நடத்தப்படும் ஒவ்வொரு தாக்குதலுக்கும் ஐ.எஸ். மிகப் பெரிய விலையைக் கொடுக்க நேரிடும். அமெரிக்க மக்களைக் கொன்றும், காயப்படுத்தியும் தீங்கு விளைவிக்கும் விலங்கை, ஐ.எஸ். இயக்கம் தன்னுடைய வீரர் எனக் கூறியுள்ளது. அதற்குப் பதிலடி கொடுக்கும் வகையிலேயே கடந்த இரு தினங்களாக இராணுவம் அவர்களுக்கு மரண அடியைக் கொடுத்து வருகிறது.” எனப் பதிவிட்டுள்ளார்.

# இத்தாலிக் கடலில் 23 உடல்கள் மீட்பு



இத்தாலி,நவ.05

இத்தாலியின் மெடிடேரியன் கடலில் மூழ்கிப் பலியான 23 பேரின் உடல்களை ஐரோப்பிய கடற்படையினர் மீட்டுள்ளனர்.

லிபியாவில் உள்நாட்டுப் போர் நடைபெறுவதால் அங்கிருந்து வெளியேறும் பொதுமக்கள் படகுகள் மூலம் ஐரோப்பிய நாடுகளில் தஞ்சம் புகுந்து வருகின்றனர்.

அவர்கள் வரும் வழியில் படகுகள் கடலில் மூழ்கி உயிரிழப்புகள் ஏற்படுகின்றன. இதுபோன்ற சம்பவம் இத்தாலிக் கடல் பகுதியில் நேற்றுமுன்தினம் நடந்தது. லிபியாவில் இருந்து சில படகுகளில் ஏராளமானோர் சென்றுள்ளனர். மத்திய தரைக் கடல் எல்லையை அடைந்தபோது படகுகளின் இயந்திரங்களில் கோளாறு ஏற்பட்டது.

இதனால் படகுகள் கடலில் மூழ்கின. அப்போது அங்கு ரோந்து வந்த இத்தாலியக் கடற்படை வீரர்கள் மீட்புப் பணியில் ஈடுபட்டனர்.

அவர்களில் 700 பேர் உயிருடன் பத்திரமாக மீட்கப்பட்டனர். மேலும், மெடிட்டேரியன் கடலில் இருந்து 23 பேரின் உடல்கள் மீட்கப்பட்டது என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

# கார்த்தியின் ஜோடி யார்?



சென்னை,நவ.05

கார்த்தி நடிப்பில் ‘தீரன் அதிகாரம் ஒன்று’ படம் எதிர்வரும் 17ஆம் திகதி வெளியாகவிருக்கும் நிலையில், கார்த்தியின் அடுத்த படத்தில் அவருக்கு ஜோடியாக சாயிஷா சய்கல் நடிக்கவுள்ளார் எனச் செய்திகள் வெளியாகியுள்ளன.

‘பசங்க’ பாண்டிராஜ் இயக்கத்தில் பெயரிப்படாத படம் ஒன்றில் கார்த்தி நடிக்கவிருக்கிறார். அந்தப் படத்தை சூர்யா தயாரிக்க இருக்கிறார். டி.இமான் இசைமைக்கவுள்ளார் எனக் கூறப்படுகிறது.

இந்தப் படத்தில் கார்த்தி ஜோடியாக ‘மேயாத மான்’ படத்தின் மூலம் அறிமுகமாகியிருக்கும் ப்ரியா பவானி சங்கர் நடிக்க இருப்பதாக முன்னர் தகவல்கள் வெளியாகியிருந்தன.

இந்நிலையில், கார்த்தி ஜோடியாக நடிக்க ‘வனமகன்’ படத்தில் நடித்த சாயிஷா சய்கலிடம் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டு வருவதாகவும் கூறப்படுகிறது.

# விஜய்–ஓவியா இணைவார்களா?

சென்னை,நவ.05

‘பிக்பாஸ்’ நிகழ்ச்சி மூலம் ரசிகர்களின் அமோக வரவேற்பைப் பெற்றவர் ஓவியா. இவர் தற்போது ராகவா லாரன்ஸுடன் காஞ்சனா 3 படத்தில் நடித்து வருகிறார்.

இந்த நிலையில் டுவிட்டரில் இருக்கும் ஓவியா ஆர்மி ரசிகர்கள் விஜய், ஓவியா இணைந்து நடிக்க வேண்டும் என்று தங்களது விருப்பத்தைத் தெரிவித்து வருகின்றனர்.

அதற்காக ரசிகர்கள் ‘விவி’ என்ற டாக்கை கிரியேட் செய்து டிரண்ட் செய்து வருகின்றனர்.



# காட்டலோனியத் தலைவருக்கு பிடியாணை உத்தரவு

காட்டலோனியா,நவ.05

பதவி இறக்கப்பட்ட காட்டலோனியத் தலைவர் கார்ல்ஸ் பியூடிமொன்ட்டுக்கு எதிராக பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

ஸ்பெயின் நீதிபதியால் இந்தக் கைதுக்கான பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ளதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

பெல்ஜியத்தில் இருக்கின்ற பதவி நீக்கப்பட்ட காட்டலோனியத் தலைவர் கால்ஸ் பியூடிமொன்ட் உள்ளிட்ட நான்கு பேரைக் கைது செய்வதற்கான பிடியாணையையே ஸ்பெயின் நீதிபதியால் பிறப்பிக்கப்பட்டுள்ளது.

எனினும், ஒரு நியாயமான விசாரணைக்கான உத்தரவாதம் வழங்கப்படும் வரை தாம் ஸ்பெயினுக்குத் திரும்பப் போவதில்லை என அவர் தெரிவித்துள்ளார்.

இந்த நிலையில், ஸ்பெயினால் பிறப்பிக்கப்பட்டுள்ள பிடியாணை குறித்து ஆராய உள்ளதாக பெல்ஜியத்தின் அரச தரப்பு சட்டத்தரணி ஒருவர் கூறியதாகச் சர்வதேச ஊடகங்கள் தெரிவித்துள்ளன.



Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

எதிரொலி
Ethiroli
ஞாயிறு, 05 நவம்பர் 2017 ethirolijaffna@gmail.com

# செவிசாய்க்குமா அரசு?

40 நாட்களாக உண்ணாவிரதப் போரில் ஈடுபட்டு வந்த அரசியல் கைதிகள் மூவரும் பல்கலைக்கழக மாண வர்கள் வழங்கிய உறுதிமொழியை அடுத்து, தமது போராட்டத்தைத் தற்காலிகமாகக் கைவிட்டுள்ளனர். அவர்கள் தங்களை விசாரணை செய்யாமல் விடுவிக் குமாறோ, அல்லது பொதுமன்னிப்பு வழங்குமாறோ போராடவில்லை. அவர்கள் கேட்பதெல்லாம், குறைந் தபட்சம் தங்கள் மொழியைப் பேசக்கூடிய வவுனியா நீதிமன்றத்திலேயே தங்களின் வழக்கைத் தொடர்ந்து நடத்தச் சொல்லியே அவர்கள் போராடுகிறார்கள்.

சாதாரணமாக ஒரு போக்குவரத்துப் பொலிஸாரிடம் மாட்டியபின், அவர்கள் எழுதித் தரும் துண்டில் கூட மருந்துக்கும் தமிழ் இருப்பதில்லை. தனிச்சிங்களத்தில் எழுதப்பட்ட அந்தத் துண்டில் என்ன குற்றச்சாட்டு தங்கள் மீது விதிக்கப்பட்டிருக்கிறது என்று அறியமுடி யாமல் தவித்தவர்கள் பலர். அதைப் போல சிறைக ளிலும், தமிழ் அரசியல் கைதிகளைச் சித்திரவதை செய்துவிட்டு, சிங்களத்தில் எழுதப்பட்ட வாக்கு மூலத்தில் கையொப்பம் வாங்கிய சந்தர்ப்பங்கள் அநேகம். அடையாள அட்டையைக் கொண்டு செல்ல மறந்ததால் கைது செய்யப்பட்ட ஒருவர், கொழும்பில் குண்டு வைத்ததாக ஒப்புதல் வாக்குமூலம் வழங்கி யதாக திசைமாற்றப்பட்டு, காலம் முழுதும் அவரைச் சிறைப்பறவையாக்கிய பெருமை இலங்கைக்கு உண்டு. இப்படி என்ன சொல்கிறார்கள், என்ன கேட்கிறார்கள் என புரிந்து கொள்ளமுடியாத நீதிமன்றில் தங்கள் வழக்கு விசாரிக்கப்படுவதைக் கைதிகள் எப்படி ஏற் றுக்கொள்ளமுடியும்? மொழி புரியாத காரணத்தால் நீதிபதியோ, சட்டத்தரணியோ கேட்பதை ஒரு 'குத்துமதிப்பில்' கணக்கிட்டு, சைகையால் பதில் சொல்வது சாத்தியமா? அவர்கள் சொல்வதைத் தவ றாகப் புரிந்து கொண்டு அதற்கு தவறான சைகையைக் காட்டிவிட்டால், வாழ்வே தொலைந்து விடுமே. பூனைக்கு விளையாட்டு, சுண்டெலிகளுக்கல்லவா சீவன் போய்விடும்.

இதனால்தான் வழக்கை மீண்டும் வவுனியாவுக்கே மாற்றுமாறு அவர்கள் கேட்கிறார்கள். ஆனால் அரசோ அப்படி மாற்றமுடியாதெனப் பிடிவாதமாக நிற்கிறது. சரி, எல்லா இடமும் அரசின் பரிபாலனத்துக்குள் தானே நீதிமன்றங்கள் இருக்கின்றன. அப்படிப்பட்ட நிலையில், வவுனியா நீதிமன்றத்திலும், அனுராதபுரம் நீதிமன்றத்திலும் வெவ்வேறான தீர்ப்புகள் வருமென அரசு சந்தேகப்படுகிறதா? அப்படிச் சந்தேகப்படு வதாயின், அரசு நீதித்துறையிலும் தலையீடு செய்து, ஒவ்வொருவருக்கும் வெவ்வேறான நீதியை வழங்கு கின்றதோ எனச் சந்தேகப்படவேண்டியிருக்கும்.

அம்பாந்தோட்டையில் நீதிமன்ற உத்தரவை மீறி ஒரு ஆர்ப்பாட்டம் நடந்தது. அதில் எட்டுப்பேர் கைது செய் யப்பட்டனர். அந்த எட்டுப் பேரில் முன்னாள் ஜனாதிபதி மகிந்தவின் மகன் நாமலும் அடக்கம். ஆனால் என்னே அதிசயம், மற்றைய ஏழுபேரும் சிறையில் இருக்க நாமல் விடுவிக்கப்பட்டுள்ளார். ஒரே குற்றம் செய்த எட்டுப் பேர், ஒரே நீதிமன்றில் முன்னி லைப்படுத்தப்பட்டபோதே, நாமலுக்கு ஒரு நீதியும், ஏனைய ஏழு பேருக்கு இன்னொரு நீதியும் வழங்கப் படும் நாட்டில், மொழி தெரியா நீதிமன்றில் தங்களுக்கு உரிய நீதி கிடைக்காது என அரசியல் கைதிகள் எண்ணுவதில் என்ன தவறு?

நீதிமன்றத்தை மாற்றுவதால் அரசுக்கு என்ன வந்துவிடப்போகிறது? வீண் பிடிவாதத்தை விடுத்து, அரசு இனியாவது கைதிகளின் கோரிக்கைக்கு செவி சாய்க்க வேண்டும். எங்கள் அரசியல்வாதிகளுக்கே கைதிகள் பற்றி கலந்துரையாட வர, மனமில்லாத போது, மாற்றாரிடம் நீதியைக் கோருவதிலும் நியாய மில்லைதான்.

"உண்மைக்காக உரத்து ஒலிக்கும் ஊடகக் குரல்"

# ஆற்றில் குளிக்கச் சென்ற 10 பேரைக் காணவில்லை

மாத்தளை, நவ.05

மாத்தளை - லக்கலை, தெல்கமு ஓயா ஆற்றில் குளிக்கச் சென்ற சுமார் 10 பேர் நீரில் மூழ்கி காணாமல் போயுள்ளனர். நேற்று மதியம் வான் ஒன்றில் வந்த இவர்கள் ஆற்றில் குளித் துக் கொண்டிருந்த போது நீரில் மூழ்கி காணாமல் போயுள்ளதாக பொலிஸ் ஊட கப் பேச்சாளர் ருவான் குண சேகர தெரிவித்துள்ளார். காணாமல் போனவர்களைத் தேடும் பணிகள் முன்னெடுக் கப்பட்டுள்ளதாகவும், தேடு தல் பணிகளில் கடற்படைச் சுழியோடிகளும் ஈடுபடுத் தப்பட்டுள்ளதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. (உ)

# கனடாவில் கோர விபத்து: புங்குடுதீவுப் பெண் பலி!



ரொரன்டோ, நவ.05

கனடாவில் இடம்பெற்ற கோர விபத்தில் யாழ்ப்பாணம் புங்குடு தீவைச் சேர்ந்த தமிழ் பெண்ணொ ருவர் பலியாகியுள்ளார். யாழ். புங்குடுதீவு 7ம் வட்டாரத்தை சேர்ந்த லோகநாதன் கலைச் செல்வி என்பவரே விபத்தில் பலியாகியுள்ளார். கடந்த வியாழக்கிழமை ரொரன்டோ பகுதியிலுள்ள யோர்க் பல்கலைக் கழகத்திற்கு அருகில் விபத்துச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. ரொரன்ரோ பகுதியில் உள்ள ஸ்ல்லஸ் அவன்யூ பக்கத்தில் இருக்கும் வீதியில் இரண்டு வாகனங்கள் ஒன்றுடன் ஒன்று மோதியதில் இந்த அனர்த்தம் ஏற்பட்டுள்ளது. சம்பவ இடத்தில் கலைச்செல்வி உயிரிழந்துள்ள நிலையில் காயமடைந்த மற்றொருவர் வைத்தியசாலையில் சேர்க் கப்பட்டுள்ளார். காயமடைந்தவரின் கழுத்து மற்றும் பின் பகுதியில் பலத்த காயங்களுடன் ஆபத்தான நிலையில் அவசர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டுள் ளார். (உ)



# கட்டாக்காலி நாய்களால் தொல்லை

யாழ்ப்பாணம், நவ.05

யாழ் மாநகர சபைக்குட்பட்ட வீதிகளில் கட்டாக்காலி நாய்களின் தொல்லை நாளுக்கு நாள் அதிக ரித்து வருவதாக மக்கள் விசனம் தெரிவிக்கின்றார்கள். நடமாட முடி யாத அளவுக்கு கட்டாக்காலி நாய்களின் தொல்லைகள் அதிகரித் துக் காணப்படுவதுடன் வீதியில் செல்பவர்களை நாய்கள் கடிக்க வருவதாகவும் இதன் காரணமாக வீதியில் பயணம் செய்வோர் சிரமங் களை எதிர்நோக்குவதாகவும் குறிப் பிட்டுள்ளனர். இவ்விடயத்தில் சம்பந்தப்பட்டவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என பிரதேச மக் கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (உ)

# உள்ளூராட்சித் தேர்தலில் இளைஞர்களுக்கு வாய்ப்பில்லை

கொழும்பு, நவ.05

எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர் தலில் இளைஞர்களுக்கு கிடைத்துள்ள வாய்ப்புகள் மிகவும் குறைவாகவே உள்ளதாக 'கபே' அமைப்பு தெரிவித் துள்ளது. அந்த அமைப்பின் நிறை வேற்று பணிப்பாளர் கீர்த்தி தென்ன கோன் இந்தத் தகவலை வெளியிட்டுள் ளார். பிரதான கட்சிகளின் ஊடாக வேட்புமனு தாக்கல் செய்யப்படும் போதும் இளம் வேட்பாளர்களின் எண்ணிக்கை குறைந்த மட்டத்திலேயே உள்ளது. எனினும் புதிய தேர்தல் முறைக்கு அமைவாக சுயாதீனமாக தேர்தல்களில் போட்டியிட்டு வெற்றி பெறுவதற்கு அதிக வாய்ப்பு இருப்ப தாக கீர்த்தி தென்னகோன் தெரிவித் தார். (உ)

# கொட்டும் மழையில் எரிபொருளுக்கு காத்திருப்பு



நெல்லியடி, நவ.05

எரிபொருள் விநியோ கத்தில் மட்டுப்பாடு ஏற்பட்டதையடுத்து மக்கள் நீண்டவரிசையில் காத்திருந்து எரிபொருள் நிரப்பிச் செல்கின்றனர். யாழ்.குடாநாட்டில் கடும்மழை பெய்து வருகின்ற நிலையிலும் மழையையும் பொருட் படுத்தாது பொதுமக்கள் நீண்ட வரிசையில் எரிபொருளுக்காக காத்திருந்ததை அவதா னிக்க முடிந்தது. (உ-11)

## இன்று நாளும் கோளும்

05.11.2017 ஞாயிற்றுக்கிழமை ஏவிளம்பி வருடம் ஐப்பசி மாதம் 19 ஆம் நாள்

பிரதமை பகல் 09.44 வரை | கார்த்திகை பகல் 01.49 மணி வரை | அமிர்தயோகம்
இராகுகாலம் 04.30 - 06.00 | சுபநேரம் 01.30 - 02.00 | எமகண்டம் 12.00 - 01.30

| மேஷம் | ரிஷபம் | மிதுனம் | கடகம் | சிம்மம் | கன்னி | துலாம் | விருச்சிகம் | தனுசு | மகரம் | கும்பம் | மீனம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| பயம் | பொறுமை | நன்மை | வெற்றி | நலம் | அமைதி | நட்பு | ஜெயம் | யோகம் | சாந்தம் | வரவு | எதிர்ப்பு |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எதிரொலி
Ethiroli

ஞாயிறு 05 நவம்பர் 2017



# தொடரும் மழையால் இயல்பு பாதிப்பு



திருநெல்வேலி, நவ. 05

வடக்கில் அடை மழை தொடர்கின்ற நிலையினில் அயன மண்டலத்தில் ஏற்பட்டுள்ள குழப்ப நிலை தொடர்ந்தும் இலங்கைக்கு மேல் காணப்படுவதால் தொடர்ந்தும் முகில் சார்ந்த மழையுடன் கூடிய வானிலை காணப்படும் எனத் திருநெல்வேலி வானிலை அவதானிப்பு நிலையப் பொறுப்பதிகாரி ரி.பிரதீபன் தெரிவித்துள்ளார்.

வடக்கு மாகாணங்களின் சில இடங்களில் வரும் 24 மணித்தியாலங்களில் 100 மில்லி மீற்றர் வரையான மழைவீழ்ச்சி பதிவாகலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

திருமலையில் இருந்து காங்கேசன் துறை, புத்தளம் ஊடாக காலி வரையாகக் கடற்பிரதேசங்களில் அதிக மழையுடன் கூடிய காற்று வடமேற்காக 30 தொடக்கம் 40 கிலோ மீற்றர் வேகத்தில் வீசும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை நல்லூர், பொம்மை வெளி, காக்கைதீவு உள்ளிட்ட பெரும்பாலான இடங்களில் தொடர்ந்து பெய்துவரும் கடும் மழை காரணமாக பொது மக்களின் இயல்பு நிலை பாதிப்புக்குள்ளாகியுள்ளது. வீதிகள் பல வெள்ளக்காடாகக் காட்சியளித்துள்ளன.

இதே மழைக் காலநிலை மேலும் இரண்டு நாட்களுக்கு நீடிக்கும் எனக் கூறப்பட்டுள்ளது. (உ)

## சூதாடியோர் பிடிபட்டனர்

கிண்ணியா, நவ.05

கிண்ணியா பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட சேனைக்காடு மையவாடிக்கு இடைப்பட்ட பகுதியில் பணத்துக்கு சூது விளையாடிய நான்கு பேர் நேற்றுமுன்தினம் ஒரு தொகைப் பணத்துடன் கைது செய்யப்பட்டுள்ளனர்.

திருகோணமலைப் பிராந்தியப் போதைப் பொருள் தடுப்புப் பிரிவின் அதிகாரிகள் இதனைத் தெரிவித்துள்ளனர். பொது மக்கள் பொலிஸாருக்கு வழங்கிய இரகசிய தகவலையடுத்தே சுற்றிவளைப்பின் போது அந்தப் பகுதியைச் சேர்ந்த நால்வர் கைது செய்யப்பட்டனர்.

இவர்கள் கிண்ணியா பொலிஸில் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக திருகோணமலைப் பிராந்திய போதைப்பொருள் தடுப்புப் பிரிவினர் தெரிவித்தனர். (உ)



## 300 மகா நாயக்கர்கள் மைத்திரியைச் சந்தித்தனர்

கொழும்பு, நவ.05

உலக பௌத்த மகா சம்மேளனத்தின் 7வது பௌத்த மாநாட்டில் பங்குபற்றுவதற்காக இலங்கை வந்துள்ள பிரதிநிதிகள் ஜனாதிபதி மைத்ரிபால சிறிசேனவைச் சந்தித்தனர்.

இந்தச் சந்திப்பு நேற்று முன்தினம் கொழும்பு கோட்டையில் உள்ள ஜனாதிபதி மாளிகையில் இடம்பெற்றது. ஜனாதிபதி மைத்ரிபால சிறிசேனவின் அழைப்பில் இவ்வருடம் மாநாடு இலங்கையில் நடைபெறுவதுடன், 47 உறுப்பு நாடுகளைச் சேர்ந்த 300 பிரதான மகா நாயக்க தேரர்கள் உள்ளிட்ட மகா சங்கத்தினர் இந்நிகழ்வில் பங்குபற்றுகின்றனர்.

இப்பிரதிநிதிகளுடன் ஜனாதிபதி சுமூகமாகக் கலந்துரையாடினார்.

'உலக சமாதானத்துக்குப் பௌத்த சமயம்' எனும் தொனிப்பொருளின் கீழ் மாநாடு கடந்த வியாழக்கிழமை கொழும்பில் ஆரம்பமானது. இம் மாநாடு எதிர்வரும் 07ஆம் திகதி வரை நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (உ)



## முத்து வைத்திருந்தவர் கைது

கொழும்பு, நவ.05

பம்பலப்பிட்டி - புகையிரதப் பாதைப் பகுதியில் அனுமதிப் பத்திரம் இன்றி முத்துக்களை வைத்திருந்த ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேக நபரிடம் இருந்து 3 முத்துக்கள் பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளன. கைது செய்யப்பட்டவர் மாத்தளை வலாவெல பிரதேசத்தைச் சேர்ந்த 40 வயது மதிக்கத்தக்க நபர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. சந்தேகநபர் நேற்று புதுக்கடை நீதிமன்ற நீதிவானிடம் முன்னிலைப் படுத்தப்பட்டார். (உ)

## ஆசியாவின் கேந்திரமாக இலங்கையை மாற்றுவோம்

கொழும்பு, நவ.05

ஹம்பாந்தோட்டைத் துறைமுகம், மத்தள விமான நிலையம் என்பனவற்றின் அபிவிருத்தியை அடிப்படையாகக் கொண்டு ஆசிய பொருளாதாரத்தின் கேந்திர நிலையமாக இலங்கை மாற்றியமைக்கப்படும் என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

ஹம்பாந்தோட்டையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்வொன்றில் பிரதமர் இவ்வாறு உரையாற்றுகையில், நாட்டுக்குச் சுமையாகக் காணப்பட்ட ஹம்பாந்தோட்டைத் துறைமுகம் சீனாவுடன் இணைந்து கூட்டுத் தொழில் முயற்சியாக மாற்றப்பட்டிருப்பதாகப் பிரதமர் சுட்டிக்காட்டினார். சீனாவின் பாரிய அளவிலான நிறுவனம் ஒன்று இதில் இணைந்துள்ளமையினால் கூடுதலான கப்பல்கள் இலங்கைக்கு வரும் என்று பிரதமர் நம்பிக்கை வெளியிட்டார். கடந்த காலத்தில் பியகம நகரம் அபிவிருத்தி செய்யப்பட்டதைப் போன்று ஹம்பாந்தோட்டை நகரமும் அபிவிருத்தி செய்யப்படும் என்றும் அவர் கூறினார். (உ)

## நொண்டிச் சாட்டுகள் வேண்டாம்

போர் நடக்கேக்கை எத்தினை நாள் பேப்பரை வாசிக்க வேணுமெண்டு வாங்கிறது. வாசிக்க மனமில்லாமல் அப்பிடியே மடிச்சு வைச்சிடுறது வாசிக்கிறேல்லை. ஏனெண்டால் அதிலை என்ன கிடக்கோ? ஏது கிடக்கோ? வாசிச்சால் மனம் கிலேசிச்சுப்போமோ? எண்ட ஒரு பயம்.

போர் முடிஞ்சு கன நாளாப்போச்சுது. எண்டாலும் இப்ப கொஞ்ச நாளா அதே மாதிரி, பேப்பர் வாங்கினாலும் பிரிச்சுப் படிக்க மனம் ஏவுதில்லை. மனக் குளப்பமாக் கிடக்கு. காரணம் அதிலை வாற செய்தியள் தான். எப்ப பாத்தாலும். சிறுவர் துஷ்பிரயோகம், வன்முறை, கடத்தல், பாலியல் வன்புணர்வு. துவக்குச் சூடு. வாள் வெட்டு எண்டு கனக்க. அதிலையும் வயசு வித்தியாசமில்லாமல் பாலியல் சேட்டையள் வேறை. படிச்சவன், படிக்காதவன் எண்டு வித்தியாசம் இல்லாமல், குழப்படியளாக் கிடக்கு.

என்ன நடந்தாலும் அது போராலை தான் நடக்குது எண்டு ஒரு நொண்டிச் சாட்டு. நாய்க்கு எங்கை அடிச்சாலும் காலைத் தூக்கிக் கொண்டு ஓடுமாம், அது மாதிரிப் போர் ஒரு சாட்டாக் கிடக்குது. உதென்ன நொண்டிச் சாட்டு? தெரியாமல்தான் கேக்கிறன்! அவங்கள் சொன்னவங்களே? இல்லாட்டிக் காட்டித்தான் தந்தவங்களே? உப்பிடித் திருகுதாளம் பண்ணுங்கோவெண்டு!

அவங்கள் இருக்கேக்கைதானே நீங்கள் மனுசராவும், மானத்தோடையும் இருந்தனீங்கள்? பிறகென்ன போராலை தான் கெட்டனாங்கள் எண்ட கதை..! உங்களை ஒருதரும் கெடுக்கேல்லை. நீங்களே உங்களைக் கெடுத்துக் கொண்டனியள் எண்டதுதான் உண்மை. இதை எந்தக் கோவிலிலையும் நான் கப்பூரம் கொழுத்திச் சத்தியம் பண்ணத்தயார், வாங்கோ!

கொஞ்ச இளசுகள் உந்தக் கோதாரியிலை போன சினிமாப் படத்தைப் பாத்திட்டு அது மாதிரித் தலைவெட்டு, உடுபுடவை, மோட்டச் சைக்கிள் ஓட்டம். பொடிச்சியளும் அதையே பாத்திட்டு உடுப்பு நடப்பு, போடி...வாடி... என்னடீ...? என்னடா..? சினிமாவிலை வாறதெல்லாம் உண்மை எண்டு நம்பிக் கொண்டு.... சினிமாப் பாணியிலையே அவேன்ரை சீவியம்.

அது போகட்டுமெண்டு பாத்தால், வீட்டிலை ரி.வி நாடகங்களைப் பாத்திட்டு பெரிசுகளும் அதே பிடி...பிடிக்கினம். அவையும் ஆக்களை மதிக்கிறேல்லை. ரி.வி யாலை நேர வழிக்குச் சாப்பாடு தண்ணி இல்லை. எப்பவும் அவை சமையல், சாப்பாடு, ரீ.வி, படுக்கை இப்பிடி இருக்கிறதாலை அவையிலை அரைவாசிப் பேருக்கு உலகத்திலை இல்லாத வருத்தங்கள் வேறை. அதுக்குச் சாப்பாடு மாதிரிக் குளிசையளையும் அள்ளிக் குடுத்துக் கிடக்கு. அவை அதையும் விழுங்கிக் கொண்டு அட்டகாசம் தானே!

நான் அவையளை ரி.வி பாக்க வேண்டாமெண்டு சொல்லேல்லை. பாருங்கோ, எல்லாம் ஒரு கணக்கா இருக்க வேணும். அவங்கள் யாவாரத்துக்காக எல்லாக் குப்பையளையும் போடுவாங்கள். அதை நாங்கள் குடும்பமா இருந்து பாத்திட்டு உண்மை எண்டு நம்பி, அப்பிடியே நடக்க வெளிக்கிட்டால், என்ன நடக்கும்?

பதினைஞ்சு வயதை அறுபத்தைஞ்சு வயது வன்புணரும், வாள் சண்டை நடக்கும், வயசுக்கு வரமுன்னம் சொல்லிக் கொள்ளாமல் ஓடிவினம், பேந்தெங்கை ஒழுக்கம் இருக்கப் போகுது? நாங்கள் கெட்டது எங்களாலைதான் தெரியுமோ?

"உன்னைச் சொல்லிக் குற்றமில்லை, என்னைச் சொல்லிக் குற்றமில்லை காலஞ் செய்த கோலமடி, கடவுள் செய்த குற்றமடி" எண்டு பாடவேணும்போல கிடக்கு.

**- வில்லங்கம் விநாசி**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாகன விபத்தில் இருவர் படுகாயம்



ஹட்டன், நவ.05

ஹட்டன் நுவரெலியா பிரதான வீதியில் குடாகம பகுதியில் வாகனங்கள் இரண்டு மோதி விபத்துக்குள்ளாகியதில் இருவர் பலத்த காயங்களு டன் டிக்கோயா ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இவ் விபத்து நேற்று நண்பகல் ஒரு மணியள வில் இடம்பெற்றுள்ளது. ஹட்டனிலிருந்து ரக லொறி ஒன்றும், நுவரெலியாவிலிருந்து ஹட்டன் பகுதியை நோக்கிச் சென்ற லொறி ஒன்றும் மோதுண்டதில் இந்த விபத்துச் சம் பவம் இடம்பெற்றுள்ளது. சிறிய ரக லொறி யில் சென்ற இருவரே காயங்களுக்கு உள்ளாகி யுள்ளனர். (உ)

## அந்த நாள் ஞாபகம்.....!



**05.11.1814**

இலங்கையின் வடக்கு மற்றும் வட-மேற்குப் பகுதிகளில் இடம் பெற்ற பெரும் சுழற்காற்று யாழ்ப்பாணம், விடத்தல் தீவு, மற்றும் மன்னார் ஆகிய இடங்களில் பெரும் அழிவை ஏற்படுத்தின.

### ஐ.நா. சமாதானப் பணிகளில்

# இரு பெண் அதிகாரிகள்

கொழும்பு, நவ.05

ஐ.நாவின் சமதான நடவடிக்கைகளில் முதன் முறையாக இலங்கை பெண் இராணுவ அதிகாரிகள் ஈடுபடவுள்ளனர்.

இவர்கள் மத்திய ஆபிரிக்காவின் சமா தான நடவடிக்கைகளுக்கான விஜயத்தை மேற்கொள்ளவுள்ளனர். இலங்கை இரா ணுவ சேவைப் படையணியைச் சேர்ந்த மேஜர் திஷ்ந்தி மென்டிஸ், இலங்கை இரா ணுவ மகளிர் படையணியைச் சேர்ந்த நிஷ்ந்தி லியனகே ஆகியோரே, இவ்வாறு ஐ.நாவின் சமதான நடவடிக்கைகளில் ஈடு படவுள்ளனர். ஒரு வருட காலத்தைக் கொண்ட இந்தச் சமாதான நடவடிக்கைகளில், இலங்கை இராணுவத்தின் சார்பாகக் கலந்து கொள்கின்ற முதல் இரு பெண் இராணுவ அதிகாரிகள் இவர்கள் எனக் குறிப்பிடப் பட்டுள்ளது. (உ)

# எரிபொருள் தட்டுப்பாடு



கொழும்பு, நவ.05

நாடுபூராகவும் எரிபொருள் விநியோகம் மட் டுப்படுத்தப்பட்டுள்ளதாகத் தகவல்கள் வெளி யிடப்பட்டுள்ளன.

பெற்றோலியக் கூட்டுத்தாபனத்துக்கு எரி பொருள் ஏற்றி வரும் கப்பல்களினால் ஏற்பட் டுள்ள தாமதத்தினால், எரிபொருள் விநியோ கம் மட்டுப்படுத்தப்பட்டுள்ளதாக, அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரி வித்துள்ளார். திங்கட்கிழமை எரிபொருள் ஏற் றிய கப்பல் ஒன்று கொழும்பு வந்து சேரும் என்று எதிர்பார்க்கப்படும் நிலையில், வரும் செவ்வாய்க்கிழமை நிலைமைகள் சீரடையும் என்றும் அவர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

லங்கா ஐஓசி நிறுவனத்தினால் இறக்குமதி செய்யப்பட்ட எரிபொருள், தரக்குறைவாக இருந்த தால், அது நிராகரிக்கப்பட்டது. இதையடுத்தே, இந்த நெருக்கடி ஏற்பட்டதாக பெற்றோலியக் கூட்டுத்தாபன தொழிற்சங்கங்கள் தெரிவித்துள் ளன.

சபுகஸ்கந்தவில் பெற்றோலியக் கூட்டுத் தாபன களஞ்சியத்தில் வரையறுக்கப்பட்டளவு எரிபொருளே கையிருப்பில் இருப்பதாகவும், இதுபோன்ற நிலைமைகள் ஏற்படாத வகை யில் அரசாங்கம் தடுப்பு நடவடிக்கையில் ஈடு பட வேண்டும் என்றும், பெற்றோலியக் கூட்டுத் தாபன தொழிற்சங்க மூத்த அதிகாரி ராஜகருண தெரிவித்துள்ளார்.

இதேவேளை, எரிபொருள் தட்டுப்பாடு ஏற் படவில்லை என பெற்றோலியக் கைத்தொழில் அமைச்சு அறிவித்துள்ளது. (உ)

# கீதா குமாரசிங்ஹ சம்பளத்தைத் திரும்பச் செலுத்த வேண்டும்

கொழும்பு, நவ.05

கீதா குமாரசிங்ஹ நாடாளுமன் றில் இதுவரை பெற்றுவந்த சம்பளம் மற்றும் கொடுப்பனவுகளை மீளச் செலுத்த வேண்டியேற்படும் எனத் தக வல்கள் வெளியிடப்பட்டுள்ளன.

இரட்டைக் குடியுரிமை பெற்ற தாக அவரது நாடாளுமன்ற உறுப் புரிமை பறிக்கப்பட்டிருந்தது. அதனை எதிர்த்து அவர் மேன்முறையீடு செய் திருந்தார். மேன்முறையீட்டு நீதிமன் றும் அவரது பதவி பறிக்கப்பட்டதை ஏற்றுக்கொண்டிருந்தது.

இந்நிலையில் அவரது நாடாளு மன்ற உறுப்புரிமை இல்லாமல் போயுள் ளதால், நாடாளுமன்ற உறுப்பினராக இருந்தபோது அவர் பெற்றுக்கொண்ட சம்பளம் மற்றும் கொடுப்பனவுகள் ஆகியனவற்றை மீண்டும் செலுத்த வேண்டி வருமென்று, நாடாளுமன் றத்தை மேற்கோள்காட்டி தகவல்கள் வெளியிடப்பட்டுள்ளன. (உ)

# சைட்டம் பிரச்சினையைத் தீர்த்தமைக்கு நன்றி



கொழும்பு, நவ.05

மாலபே சைட்டம் தனியார் மருத்துவக் கல் லூரி தொடர்பில் அரசாங்கம் வழங்கியுள்ள தீர்வுகள் குறித்து அரச மருத்துவ பீட மாண வர்களின் பெற்றோர் சங்கத்துக்கும் ஜனாதி பதியின் செயலாளர் ஒஸ்டின் பெர்னாண்டோ வுக்கும் இடையிலான கலந்துரையாடல் நேற்று முன்தினம் ஜனாதிபதி அலுவலகத்தில் இடம் பெற்றது. இதன்போது சைட்டம் பிரச்சினை யைத் தீர்ப்பதற்கு, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் தலையீட்டைப் பாராட்டிய அச் சங்கம், மருத்துவக் கல்லூரி தொடர்பில் அரசாங்கம் முன்வைத்துள்ள தீர்வுகள் குறித்து, சாதகமாக கருத்துக்களை வெளியிட்டது. (உ)

## பஸ்ஸிலிருந்து இறங்கியவர் மோட்டார் சைக்கிள் மோதி பலி

ஏறாவூர், நவ.05

ஏறாவூர் பொலிஸ் பிரிவுக்கு உட் பட்ட கிரான் பகுதியில் ஏற்பட்ட விபத்தில் பெண் ஒருவர் உயிரிழந்துள் ளார்.

குறித்த விபத்து நேற்று முன்தினம் இரவு 7.30 மணியளவில் கிரான் றெஜி கலாச்சார மண்டபத்துக்கு முன்பாக இடம்பெற்றுள்ளது. பஸ்ஸிலிருந்து இறங்கிய அவர் பின்னால் வந்த மோட் டார் சைக்கிளில் மோதுண்டு உயி ரிழந்துள்ளார் என குறிப்பிடப்படு கின்றது. விபத்தில் உயிரிழந்த பெண் 49 வயதுடையவர் எனவும், வவுனி யாவில் இருந்து கிரான் கோரகல்லி மடுவில் உள்ள உறவினரின் வீட்டுக்கு வருகை தந்தவர் எனவும் தெரியவந்

# பறவைகள் சரணாலய எல்லையிடல் இடைநிறுத்தம்

யாழ்ப்பாணம், நவ.05

யாழ்ப்பாண மாவட்ட நிர்வாகத் துக்கு உட்பட்ட வடமராட்சி கிழக் குப் பகுதியினை தேசிய பறவைகள் சரணாலயமாகப் பிரகடனப்படுத்தி அப்பகுதியில் தடுப்பு வேலிகளை அமைக்க முயன்றமை தற்காலிக மாக தடுத்து நிறுத்தப்பட்டுள்ள தாக மாவட்ட அரச அதிபர் நா. வேதநாயகன் தெரிவித்தார்.

வடமராட்சி கிழக்குப் பகுதி யில் 6 ஆயிரம் ஏக்கர் பறவைகள் சரணாலயம் எனக் கூறப்பட்ட நிலையில் தற்போது 6 ஆயிரம் கெக்டேயர் நிலம் அதாவது 14 ஆயிரத்து 500 ஏக்கரை அபக ரிக்க வனஜீவராசிகள் திணைக்க ளம் முற்படுவதாக அப்பகுதி மக் கள் குற்றம் சாட்டுவது தொடர்பில் கேட்டபோதே மேற்கண்டவாறு தெரிவித்தார். அது தொடர்பில் குறிப்பிட்ட அவர்,

"குறித்த விடயத்துக்கு தீர்வினை வழங்குமாறு அப்பகுதி மக்கள் என்னிடமும் கோரிக்கை விடுத்த தோடு கூட்டமைப்பின் நாடாளு மன்ற உறுப்பினரிடமும் மேற்படி கோரிக்கையினை கொண்டு சென் றனர். இதனால் நாமும் அப்பகுதி யினை நேரில் பார்வையிட் டோம். அதன்போது மக்கள் முன் வைத்த குற்றச்சாட்டில் உண்மை கள் இருப்பதுபோல் தெரிகின் றது. எனவே இவ் விடயத்திற்கு ஓர் நிரந்தரத் தீர்வினை எட்டி அதற்கு தீர்வு காணும். வரையில் குறித்த திணைக்களம் அப்பணியினை உடன் நிறுத்துமாறு அறிவுறுத்தி யுள்ளோம்" - என்றார். (உ)

# மினுவாங்கொடை விபத்தில் மூவர் பலி மூவர் படுகாயம்

கொழும்பு, நவ.05

கட்டுநாயக்க, மினுவாங்கொடை பகுதியில் நேற்று அதிகாலை டிரக் வண்டியொன்று விபத்துக்குள்ளா னதில், 3 பேர் உயிரிழந்துள்ளனர். மேலும் 3 பேர் காயங்களுக்கு உள் ளாகியுள்ளதாக,பொலிஸார் தெரி வித்துள்ளனர்.

இந்தச் சம்பவத்தில் மஹவ, நாவ லபிட்டி மற்றும் மாத்தளை பிரதே சங்களை சேர்ந்த 26, 27 மற்றும் 54 வயதானவர்களே உயிரிழந்துள்ள தாக பொலிஸாரின் விசாரணை யிலிருந்து தெரியவந்துள்ளது.

மேலும், இதன்போது காயம டைந்த மூவர் நீர்கொழும்பு வைத் தியசாலையில் அனுமதிக்கப்பட்டு, சிகிச்சை பெற்றுவருவதாக தெரி விக்கப்படுகின்றது. சம்பவம் தொடர் பில் பொலிஸார் மேலதிக விசார ணையை முன்னெடுத்துள்ளனர். (உ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தேர்தலுக்கு முன் ஆசிரியர்களுக்கு இடமாற்றம்

ஒரே தேசிய பாடசாலையில் 10 வருடங்களுக்கு அதிக காலம் சேவையாற்றும் முதலாம் மற்றும் 2 ஆம் தரங்களில் போதிக்கும் ஆசிரியர்கள் தேர்தலுக்கு முன்னர் இடமாற்றம் செய்யப்படவுள்ளதாக கல்வி அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. இவ்வாறு இடமாற்றம் செய்யப்பட வேண்டிய ஆசிரியர்கள் 9 ஆயிரம் பேர் உள்ளதாகவும் அமைச்சின் சிரேஷ்ட பேச்சாளர் ஒருவர் கூறியுள்ளார். ஒரே பாடசாலையில் 10 வருடங்களை நிறைவு செய்துள்ள ஆசிரியர்கள் தொடர்பான தகவல்களை வழங்குமாறு அதிபர்களைக் கோரியுள்ளதாகவும் இவை அடுத்த வாரத்தில் கிடைக்கப்பெறும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். உயர் தரத்தில் போதிக்கும் 2800 ஆசிரியர்களுக்கு இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் சுட்டிக்காட்டியுள்ளார். (உ)

## பங்காளிச் சந்திப்பு



உள்ளூராட்சித் தேர்தலை எதிர்கொள்வது பற்றி, தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகள், யாழ்ப்பாணத்தில் சந்தித்துக் கலந்துரையாடின. இதில் ஈ.பி.ஆர்.எல்.எவ் கலந்து கொள்ளவில்லை.

## தாழங்குடா இராணுவமுகாம் அகற்றப்பட்டுள்ளது

மட்டக்களப்பு, நவ.05

மட்டக்களப்பு, மண்முனைப்பற்று பிரதேச செயலகத்துக்குட்பட்ட தாழங்குடாவில் அமைக்கப்பட்டிருந்த இராணுவ முகாம் அகற்றப்பட்டுள்ளது. 2007ஆம் ஆண்டு, கிழக்கில் யுத்தம் முடிவுக்கு வந்ததன் பின்னர் தாழங்குடாவில் தனியார் காணியொன்றில் இந்தப் படைமுகாம் அமைக்கப்பட்டது. இந்நிலையில், 2015ஆம் ஆண்டுக்குப் பின்னர் தனியார் காணிகளில் உள்ள படை முகாம்கள் அகற்றப்படவேண்டுமென்ற கோரிக்கைகளுக்கு அமைவாக இந்தக் காணி விடுவிக்கப்பட்டது. கடந்த 10 வருடத்துக்கும் மேலாக தாழங்குடாவில் தனியார் காணியில் இருந்த இப்படைமுகாம் அகற்றப்பட்டு, அந்த காணிகள் உரியவர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. (உ)

## அரசியல்வாதிகளை விடவும் பேய்கள் பரவாயில்லை!



## ஹொக்கிச் சங்க புதிய நிர்வாகம்

யாழ். மாவட்ட ஹொக்கிச் சங்கத்தின் 2017, 2018 ஆம் ஆண்டுகளுக்கான புதிய நிர்வாகத் தெரிவு முன்னைநாள் யாழ். மாவட்ட ஹொக்கிச் சங்க தலைவர் இளம்பிறையன் தலைமையில் நேற்று சனிக்கிழமை கொக்குவில் இந்துக் கல்லூரியில் நடைபெற்றது.

இதன்போது, சங்கத்தின் தலைவராக வைத்திய கலாநிதி த. காண்டீபன், செயலாளராக க.கஜேந்திரன், பொருளாளராக சி.ஏ.அரவிந்தன் உப தலைவர்களாக ஜி. டி. மதியழகன், கே. குலரத்தினம், பி. நேசரூபன், உப செயலாளராக ரி. பிரியலக்ஸன் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். (அ)

# தொடர்ச்சிகள்

### போராட்டம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பல்கலைக்கழக மாணவர்கள், உண்ணாவிரதப் போரில் ஈடுபட்டிருந்த கைதிகளை நேற்று மதியம் 12.30 மணியளவில் சந்தித்தனர். இதனையடுத்து தற்காலிகமாக தமது போராட்டத்தைக் கைவிடுவதாகக் கைதிகள் அறிவித்தனர்.

" பல்கலைக்கழக மாணவர்களின் வார்த்தைகளில் எங்களுக்கு நம்பிக்கை இருக்கிறது. அதனை நம்பியே எமது போராட்டத்தைத் தற்காலிகமாகக் கைவிடுகிறோம். எமக்குத் தீர்வு கிடைக்கும் என நம்புகிறோம். ஆயினும் அடுத்த மாதம் 5 திகதி எமது வழக்கு விசாரணைக்கு வருகின்றது. அதற்கு முன்னதாக எமது கோரிக்கைகளை நிறைவேற்றாவிட்டால், சாகும் வரை மீண்டும் உண்ணாவிரதப் போரில் குதிப்போம்" என்று அனுராதபுரத்தில் உண்ணாவிரதப் போரில் ஈடுபட்ட அரசியல்கைதிகள் மூவரும் தெரிவித்தனர். (அ)

### வலி.வடக்கில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செயலர் ஆகியோருக்கும் நேரடியாக மனு வழங்கப்படவுள்ளது. 'எமது மண் எங்களுக்கானது' என்ற கோஷத்துடன் இந்த அமைதிப்பேரணி நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

### மாவீரர் நாள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

திகதி பிற்பகல்வரை வேட்புமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

உள்ளூராட்சி சபைத் தேர்தலை நடத்துவதற்கான அனுமதியளிக்கும் வர்த்தமானி அறிவிப்பைக் கடந்த முதலாம் திகதி துறைசார் அமைச்சர் பைசர் முஸ்தபா வெளியிட்டிருந்தார்.

அதனையடுத்து கட்சியின் செயலாளர்களுடன் கலந்துரையாடியதற்கு அமைய வேட்புமனுக்களைத் தாக்கல்செய்யும் தினமான மேற்படி திகதிகளைத் தேர்தல்கள் ஆணையகம் தீர்மானித்துள்ளது. (அ)

### மாவையிடம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவரிடம் துருவித் துருவிக் கேள்விகளைக் கேட்டு, வாக்குமூலத்தைப் பதிவு செய்தனர்.

இதேவேளை, இந்த வழக்கில் தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் மற்றொரு நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரனிடமும் வாக்குமூலம் பெறப்படவுள்ளது. அதற்கு அவரிடம் நேரம் கேட்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணத்திலிருந்து ஒளிபரப்பாகும் தொலைக்காட்சியின் செய்தியாளரிடமும் நேற்றுமாலை வாக்குமூலம் பெறப்பட்டது. அவரால் எடுக்கப்பட்ட காணொலி ஒன்று தொடர்பாகவே இந்த வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது. இந்த வழக்கில் ஐக்கிய தேசியக் கட்சியின் யாழ்ப்பாண நாடாளுமன்ற உறுப்பினரும் இராஜங்க அமைச்சருமான விஜயகலா மகேஸ்வரனிடம் கடந்த சில மாதங்களுக்கு முன்னர் வாக்குமூலம் பெறப்பட்டமை குறிப்பிடத்தக்கது. வாக்குமூலம் பெறப்படும் அனைவரும் வழக்கில் சாட்சிகளாகக் குறிப்பிடப்பட்டுள்ளனர் என்றும் தெரிய வருகின்றது. (எ)

### அரசியல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தொடர்ந்தும் உழைப்போம். அரசாங்கம் அரசியல் கைதிகளின் கோரிக்கையை நிறைவேற்ற சாத்தியம் உள்ளது. அவ்வாறு நிறைவேற்றத் தவறினால் நாங்கள் இன்னும் தீவிரமாகப் போராடுவோம். அதனை மக்கள் நிச்சயமாகப் பார்ப்பார்கள். இது அரசியல் கைதிகளின் உயிர் சம்பந்தப்பட்ட விடயம். அவர்களை நாங்கள் சாகவிட முடியாது. அவர்களுக்காக நாம் உயிரைக் கொடுத்துப் போராடுவோம்" என வடமாகாண சபை உறுப்பினர் எம்.கே. சிவாஜிலிங்கம் கூறியுள்ளார்.

தமது வழக்குகளை வவுனியா நீதிமன்றத்திலிருந்து அனுராதபுரம் நீதிமன்றுக்கு மாற்ற வேண்டாம் எனக்கோரித் தமிழ் அரசியல் கைதிகள் 3 பேர் கடந்த 40 நாட்களாக உணவுத் தவிர்ப்புப் போராட்டத்தை நடத்தியிருந்தனர்.

மேற்படி உணவுத் தவிர்ப்பு போராட்டத்தை நிறைவுக்குக் கொண்டு வந்தமை தொடர்பிலேயே சிவாஜிலிங்கம் மேற்கண்டவாறு நேற்றுக் கூறினார். (அ)

### தமிழரசோடு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விலகமாட்டோம்" எனவும் ஈ.பி.ஆர்.எல்.எவ் இன் தலைவர் சுரேஸ் பிரேமச்சந்திரன் அறிவித்துள்ளார்.

சமகால அரசியல் நிலமைகள் குறித்து யாழ்.ஊடக அமையத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

"புதிய அரசியலமைப்பின் இடைக்கால அறிக்கை வெளியாகியுள்ளது. அதில் சமஷ்டி என்பது பேசப்படவில்லை. அதே சமயம் வடக்கு, கிழக்கு இணைப்பும் பேசப்படவில்லை.

அந்த அரசியலமைப்பை தமிழரசுக் கட்சி ஆதரித்துள்ளது. அதேபோல் புதிய அரசியலமைப்பில் பௌத்த மதத்துக்கு முன்னுரிமை என்பதையும் தமிழரசுக் கட்சி எந்த எதிர்ப்பும் இல்லாமல் அப்படியே ஏற்று கொண்டிருக்கின்றது. ஆனால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உருவாக்கப்பட்டபோது வடக்கு, கிழக்கு இணைப்பு, வடக்கு, கிழக்கு தமிழர்களின் தாயகம், சுயநிர்ணய உரிமை போன்ற கொள்கைகளுடன் ஆரம்பிக்கப்பட்ட நிலையில் அந்தக் கொள்கைகளுக்கு மாறாகவே தமிழரசுக் கட்சி செயற்பட்டு வருகின்றது.

அதே சமயம் பௌத்த மதத்துக்கு முன்னுரிமை என்பதையும் தமிழரசுக் கட்சி எந்த எதிர்ப்பும் இல்லாமல் ஆதரிக்கிறது.

பௌத்தத்துக்கு முன்னுரிமை என்பதற்கு மக்கள் ஆணை வழங்கினார்களா?

இவ்வாறான நிலையில் தமிழரசுக் கட்சியுடன் இனிமேல் இணைந்து செயற்படுவதில்லை என்னும் தீர்மானத்தை நாம் எடுத்திருக்கிறோம். அத்தோடு இனிமேல் எந்தவொரு தேர்தலிலும் தனித்துப் போட்டியிட்டாலும் பரவாயில்லை, ஆனால் தமிழரசுக் கட்சியின் சின்னத்தில் போட்டியிடமாட்டோம்.

இப்படித்தமிழரசுக்கட்சியோடு இணைந்து செயற்படாமையால், நாங்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் இருந்து விலகியதாக அல்லது வெளியேறியதாக அர்த்தம் கொள்ளத் தேவையில்லை. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை உரிமைகோர தமிழரசுக் கட்சிக்கு உரிமை இல்லை.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உருவாக்கப்பட்டபோது 4 கட்சிகள் பிரதானமாக அதில் இடம்பெற்றிருந்தன, அவை தமிழர் விடுதலை கூட்டணி, ஈ.பி.ஆர்.எல்.எவ், ரெலோ, அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் ஆகிய கட்சிகளே. ஆனால் நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் ஈ.பி.ஆர்.எல்.எவ் கட்சி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உருவாக்கத்தில் கையொப்பமிடவில்லை எனக் கூறியுள்ளார்.

அவருக்கு வரலாறு தெரியாவிட்டால் பேசாமல் இருக்கவேண்டும். ஆரம்பத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் அங்கத்துவம் பெற்றிருந்த தமிழர் விடுதலை கூட்டணி மற்றும் அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ் ஆகிய கட்சிகள் கூட்டமைப்பிலிருந்து வெளியேறிய பின்னதாகவே தமிழரசுக் கட்சி தமிழ்த் தேசிய கூட்டமைப்புக்குள் உள்வாங்கப்பட்டது. இப்போது தமிழரசுக் கட்சி தாய்க் கட்சி எனக் கூறுபவர்கள் இந்த வரலாற்றை அறிந்து கொள்ளவேண்டும் " என்றும் சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்துள்ளார். (அ)

### கலையப் போகிறது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சபைகளுக்கான தேர்தல், தேசிய அரசுக்குள் ஏற்பட்டுள்ள நெருக்கடி உட்பட மேலும் சில காரணங்களாலேயே அரச தலைமை இந்த முடிவை எடுத்துள்ளது என ஆளுங்கட்சி பிரமுகர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல் ஜனவரி 27ஆம் திகதி நடைபெறவுள்ள நிலையில், பிணைமுறி மோசடி தொடர்பிலும் பல திடுக்கிடும் தகவல்கள் வெளியாவதால் அரசு மீது மக்கள் அதிருப்தியடையும் நிலை உருவாகியுள்ளது. குறிப்பாக, பிரதமர் ரணில் விக்ரமசிங்கவிடமும் நேரடியாகச் சாட்சியம் பெறுவதற்கு ஜனாதிபதி ஆணைக்குழு தீர்மானித்துள்ளது. இதற்கான அழைப்பையும் அந்தக் குழு விடுத்துள்ளது. இதன்படி, பிரதமர் ரணில் விக்ரமசிங்க ஜனாதிபதி ஆணைக்குழு முன்னிலையில் விரைவில் ஆஜராகுவார் என அறிவிக்கப்பட்டுள்ளது. மேற்படி முடிவை பிரதமர் எடுப்பதற்கு முன்னர், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுடன் கடந்த செவ்வாயன்று மனம்விட்டு பேசியுள்ளார் என்றும், சுமார் 4 மணிநேரம் வரை இந்தச் சந்திப்பு நீடித்தது எனவும் அறியமுடிகின்றது. இதன்போது, சாட்சியமளிக்கச் செல்வதற்கு முன்னர் பிரதமர் பதவியை தற்காலிகமாக இராஜிநாமா செய்யுமாறும், அவ்வாறில்லாவிட்டால் விசாரணையின் சுயாதீனத்தன்மை மீது சந்தேகம் எழும் என்றும் பிரதமருக்கு சுட்டிக்காட்டப்பட்டுள்ளதாகத் தகவல் வெளியாகியுள்ளது. அதாவது, விசாரணையின் பின்னர் பதவி இழக்க வேண்டிவரின் அது தர்மசங்கடமாக அமையும் என்பதாலேயே முன்கூட்டியே பதவியைத் துறக்குமாறு கோரப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. இதற்மைய பிரதமர் தனது பதவியைத் துறந்த பின்னரே ஜனாதிபதி அதிரடி மாற்றங்களைச் செய்யவுள்ளார்.

ரணில் விக்ரமசிங்க இவ்வாறு பிரதமர் பதவியைத் துறந்துவிட்டால் அமைச்சரவை தாமாகவே கலைந்துவிடும். அதன்பின்னர் சிங்கள, பௌத்த மக்கள் மத்தியில் செல்வாக்குப் பெற்ற ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர் ஒருவரை ஜனாதிபதி பிரதமராகத் தெரிவுசெய்து, புதிய அமைச்சரவையை ஏற்படுத்துவார் என்றும் எதிர்பார்க்கப்படுகின்றது. பிரதமர் பதவியை ஐக்கிய தேசியக் கட்சிக்கு வழங்காவிட்டால் அரசியல் நெருக்கடி ஏற்படும் என்பதாலேயே அக்கட்சிக்கே நாடாளுமன்றத்தில் உயர் பதவிகள் இரண்டும் வழங்கப்படவுள்ளன. அதேவேளை, பிரதமர் பதவியில் மாற்றத்தை ஏற்படுத்தினால் மகிந்த அணியின் பக்கமுள்ள எம்.பிக்கள் சிலரது ஆதரவைப் பெறமுடியும் என்றும், அவ்வாறானதொரு நிலை ஏற்பட்டால் அது ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் வெற்றிக்கு உதவியாக அமையும் என்றும் சு.க. பக்கமுள்ள சிரேஷ்ட உறுப்பினர்கள் சிலர் ஜனாதிபதிக்கு ஆலோசனை வழங்கியுள்ளனர் எனவும் தகவல் வெளியாகியுள்ளது. கூட்டரசின் 2018ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டம் எதிர்வரும் 9ஆம் திகதி நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளது. அதன்பின்னர் விவாதம் ஆரம்பமாகி டிசம்பர் 9ஆம் திகதி இறுதி வாக்கெடுப்பு நடத்தப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (அ)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# 83 கலவரம் எம்மை தொடர்ந்து கலைத்தது!! என்னுள் அரசியலை விதைத்தது!

ஈழத்தை பூர்வீகமாகக் கொண்ட பெற்றோருக்குப் பிறந்த தமிழிச்சி. எல்லோரைப்போலவும் போர் கலைத்த பல நினைவுகளோடு தேசங்களைச் சுற்றியலைந்து ஈற்றில் ஆஸ்திரேலியத்வில் நிலைகொண்டு இன்று தேசிய அரசியல் தரப்புக்களில் ஒன்றான பசுமை (கிறீன்) கட்சியின் விக்டோரிய மாநில தலைவராகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.

"எதிராலி" சார்பாக செவ்வி காணுவதற்காக அழைத்த போது, "வாருங்கள், வாருங்கள்" என்று வாய்நிறைய ஆங்கிலத்தில் அழைத்தவர், திகதி தரப்பட்ட அன்று விக்டோரிய நாடாளுமன்றத்தில் எமக்காகக் காத்திருந்தார்.

வியாபித்துக்கிடந்த 160 வருட பழமை வாய்ந்த நாடாளுமன்றக் கட்டத்தினுள் எந்த அவையும் அப்போது நடைபெற்றுக்கொண்டிருக்காத காரணத்தினால், ஓய்வெடுக்கக்கூடிய வசதியான இடமொன்றில் போய் அமர்ந்து செவ்வியை ஆரம்பிக்க ஆயத்தமானோம்.

"எதிரொலி" பிந்திய பதிப்பினைக் கைளில் வாங்கியவர் "தமிழ் பத்திரிகை ஒன்றுக்கு முதன் முதலாக செவ்வியளிக்கப்போகிறேன் என்று எவ்வளவு மகிழ்ச்சியாக உள்ளேன் தெரியுமா" என்று கேட்டார்.

அப்படியானால் ஆரம்பிக்கவேண்டியது தானே என்று காரில் போகும்போது வெகுநேரமாக யோசித்து பல தடவை கள் திரும்ப திரும்ப யோசித்து கடைசியில் ஒரு முடிவுக்கு வந்த அந்த ஒரு கேள்வியை முன்வைத்தேன்.

**கேள்வி– மக்கள் உரிமைகளுக்கான சமூக செயற்பாட்டாளராகவும் ஒரு அரசியல்வாதியாகவும் பரிணமிக்கும் பாதையில் நீங்கள் சந்தித்த சவால்கள் என்ன?**

பதில் - இது மிகவும் நல்லதொரு கேள்வி. நான் இந்த மாதிரியானதொரு களத்தை தேர்வு செய்த காலப்பகுதி மிகவும் வித்தியாசமானதாக இருந்தது. வேறு நாடுகளிலிருந்து இங்கு (ஆஸ்திரேலியாவுக்கு) வந்தவர்கள் சமூக செயற்பாட்டாளர்களாக மக்கள் உரிமைக்காகப் போராடும் போது அதற்கு அப்போது வரவேற்பு இருந்தது. எல்லோருக்கும் இப்படியான அனுபவம் கிடைக்காமலிருக்கலாம். ஆனால், என்னை பொறுத்தவரைக்கும் இப்போதுள்ளதை விட, அந்த காலப்பகுதியில் இனவேறுபாடுகளும் பாகுபாடுகளும் குறைவாகவே காணப்பட்டன என்று சொல்வேன். அந்த மாதிரியான சூழ்நிலையில் அரசியலை நோக்கி நகர்வதில் எனக்கு எந்த பிரச்சினையும் இருந்ததில்லை. அந்த வகையில் நான் உண்மையிலேயே அதிஷ்டசாலி என்றுதான் கூறவேண்டும்.

**கேள்வி– அப்படியானதொரு முடிவினை நீங்கள் மேற்கொண்டாலும் உங்களது குடும்பம் அதற்கு எவ்வளவு ஆதரவாக இருந்தது?**

பதில்: உண்மையைச் சொல்லவேண்டும் என்றால், எனது பெற்றோர் இது விடயத்தில் மிகவும் ஆதரவாக இருந்தார்கள். நான் முதன் முதலாக அவர்களிடம் எனது அரசியல் ஆர்வத்தையும் சமூக சேவையின் மீதான ஈடுபாட்டினையும் கூறும்போது அவர்கள் எனது நிலைப்பாட்டினை முழு மனதுடன் ஏற்றுக்கொண்டார்கள். தடையாக இருக்கவேண்டும் என்ற எண்ணம் அவர்களிடம் கிஞ்சித்தும் இருக்கவில்லை.

நான் காலடி எடுத்துவைக்கப்போகும் களம் பல்லின மக்களைக் கொண்டது. அவர்கள் சார்ந்த தளங்களில் வித்தியாசமான விழுமியங்களும் உள்ளன. அங்கு பல்வேறுபட்ட மனிதர்கள் உள்ளார்கள். அவர்களுக்காக பல அடுக்குகளில் பணிபுரியவேண்டிய தேவை உள்ளது. இவற்றையெல்லாம் முகம் கொடுப்பதற்கு மிகுந்த ஓர்மம் வேண்டும். அவ்வகையானதொரு பலத்தை எனக்குள் நான் வளர்த்துக்கொள்வதற்கு எனது குடும்பத்தினர் மிகவும் ஆதரவாக இருந்தார்கள் என்று அடித்துக்கூறுவேன்.

ஆனால், எனது குடும்பத்தினர் எனக்கு தடையாக இருந்திருந்தாலும்கூட, நான் இந்த துறைக்கு வருவது தடைப்பட்டிருக்காது என்பது நிச்சயம்.

**கேள்வி: நீங்கள் கூறுவதுபோல அரசியலுக்கு பலர் வந்திருந்தபோதும் கூட, ஏதோ ஒரு புள்ளியில் அவர்கள் இந்த துறையிலிருந்து வெளியேறிவிடுவார்கள். அதுதான் பல முன்னாள் புலம்பெயர் அரசியல்வாதிகளின் சம்பிரதாயபூர்வமான அணுகுமுறையாக இருந்திருக்கிறது. அவர்களது தனிப்பட்ட வாழ்க்கை, திருமணம் போன்றவை அல்லது தொடர் தோல்விகளால் அரசியலில் ஏற்பட்ட விரக்தி, கட்சிப் பூசல்கள் என்று எத்தனையோ விடயங்களை அவர்களது வெளியேற்றுத்துக்கான காரணங்களாக பார்க்கலாம். ஆனால், உங்களை தொடர்ந்தும் இந்த அரசியலில் இயக்கிக் கொண்டிருக்கும் சக்தி என்ன? குறிப்பாக உங்களது இரட்டை சகோதரி ஒரு சட்டத்தரணி. ஆனால், நீங்களோ அரசியல்வாதி. எப்படி?**

பதில் - எனது சிறுவயது வாழ்க்கை சிறிலங்காவில் பல கொடூரங்களைக் கண்டிருக்கிறது. 83 ஆம் ஆண்டு கலவரத்தை நான் என் கண்களால் நேரடியாக கண்டிருக்கிறேன். வீதிகளில் டயர்கள் எரிவதையும் கடையர்களின் வெறியாட்டத்தையும் நேரில் கண்டிருக்கிறேன். எங்களது வீட்டிற்கு வந்த காடையர்கள் கதைவைத் தட்டும்போது நானும் எனது குடும்பத்தினரும் உயிரை கையில் பிடித்துக் கொண்டு பதுங்கியிருந்திருக்கிறோம். எனக்கு ஐந்து வயதாக இருக்கும்போது நான் கண்ட இப்படியான காட்சிகள் மிகுந்த சஞ்சலத்தை எனது மனதில் ஏற்படுத்தியது. இந்த அசாதாரண நிகழ்வுகளுக்கான காரணங்களைத் தேடத்தொடங்கியது.

இந்த காலப்பகுதியில்தான், முதன் முதலாக நான் அரசியல் என்று ஒரு மொழி பேசப்படுவதை கேள்விப்பட்டேன். இந்த கலவரங்கள் அனைத்தும் அரசியல் ரீதியானது என்று கேள்விப்பட்டேன். இதனைத் தீர்க்கவேண்டிய அரசியல்வாதிகள் எதுவும் செய்யவில்லை என்றும் கேள்விப்பட்டேன். தமிழ் மக்களுக்கு வழங்கப்படவேண்டிய பதவிகள் பறிக்கப்பட்டதும் அவர்களுக்குரிய உரிமைகள் மறுக்கப்பட்டதும்கூட கொஞ்சம் கொஞ்சமாக எனக்கு விளங்கத் தொடங்கியது.

இவை அனைத்தும் எனக்குள் அரசியல் என்ற விதையை ஆழமாக விதைத்தது என்று நினைக்கிறேன்.

அதற்கு பின்னர், நாங்கள் தொடர்ச்சியாக இடம்பெயர்ந்து கொண்டிருந்ததும்கூட என்னை அரசியல் ரீதியாக ஆர்வம் கொள்ள செய்தது என்று நினைக்கிறேன். எப்போது பார்த்தாலும் பாதுகாப்பான இடங்களை நோக்கி ஓடிக்கொண்டேயிருக்கவேண்டியிருந்தது.

83 கலவரத்தின்போது நாங்கள் எமது வீட்டிலிருந்து இடம்பெயர்ந்து பாதுகாப்பான ஒரு இடத்திற்கு சென்று சில வாரங்கள் இருந்துவிட்டு, மீண்டும் எமது வீட்டுக்குத் திரும்பிய அனுபவம் அந்த வயதில் எனக்கும் எனது சகோதரர்களுக்கும்




மிகவும் அதிர்ச்சியாக இருந்தது.

அதன் பின்னர் சில வருடங்கள் சிறிலங்காவிலிருந்தோம். ஆனால், பாதுகாப்பும் எதிர்காலமும் எமக்கு கேள்விக் குறியாக இருந்த காரணத்தினால் கனடாவுக்கு இடம்பெயர்ந்தோம். 87 இல் கனடாவுக்கு இடம்பெயர்ந்து சென்று அங்கு இரண்டு வருடங்கள் வாழ்ந்தோம். எங்குள்ள தமிழர்களோடு மிகவும் நெருக்கமாகவும் அன்போடும் எமது புலம்பெயர்ந்த வாழ்வு அமைந்தது.

89 ஆம் ஆண்டு ஆஸ்திரேலியாவுக்குக் குடிபெயர்ந்து வந்து, இந்த நாட்டிலேயே நிரந்தரமாகத் தங்கிக்கொண்டோம். சிறிய வயது முதல் தான் சுமந்து திரிந்த பல்வேறு தேடல்களுக்கும் நாட்டங்களுக்கும் ஆஸ்திரேலியாவில் செயலுருப் பெற்றது.

**கேள்வி: சமூக சேவையிலும் அரசியலிலும் ஆர்வமுள்ளவர்கள் எல்லோரும் இப்படியானதொரு இடத்துக்கு வந்துவிட முடியாது. அந்த வகையில், இந்த இடத்துக்கு நீங்கள் வருவதற்காக நீங்கள் செய்து கொண்ட சுய தயாரிப்புக்கள் மற்றும் அர்ப்பணிப்புக்கள் என்ன என்று கேட்டால் என்ன பதில் சொல்வீர்கள்?**

பதில்: நான் பல்கலைக்கழகத்தில் படித்துக்கொண்டிருக்கும் போது கிட்டத்தட்ட ஐந்து வருடங்கள் தொண்டர் சேவை அடிப்படையில் சமூக சேவை அமைப்பு ஒன்றில் பணி புரிந்தேன். பல்கலைக்கழகத்திலும் கலைப்பிரிவில் எனது பட்டப் படிப்பினை மேற்கொண்டாலும் அரசியல் பாடத்தை விசேட பிரிவாக இணைத்துக்கொண்டு அதில் தேர்ச்சி பெற்றேன். இளையோல் சமூகவியல் துறையில் கலாநிதிப் பட்டத்துக்கான ஆய்வையும் மேற்கொண்டு பூர்த்தி செய்தேன்.

பல்கலைக்கழக கல்வியும் களத்தில் இறங்கி நான் மேற்கொண்ட சமூக சேவையும் எனக்கு இந்தத் துறையில் மிகப் பெரிய ஞானத்தை அளித்தது. சமூக சேவை - அரசியல் ஆகிய துறைகள் தொடர்பிலும் விசாலமான அறிவை கொடுத்தது. இந்த ஈடுபாடுகள் எனக்குள் மேலும் மேலும் ஈடுபாடுகளை ஏற்படுத்தியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2004 ஆம் ஆண்டு இலங்கையில் ஏற்பட்ட சமாதான காலப்பகுதியில் அங்கு சென்று சமூக சேவையில் ஈடுபடுவதற்கான சந்தர்ப்பம் கிடைத்தது. சுமார் மூன்று மாத காலப்பகுதிக்கு கிளிநொச்சியில் தங்கியிருந்து போரினால் மனதளவில் பாதிக்கப்பட்டவர்களுக்கு உளவள ஆலோசனை வழங்கும் தொண்டர் சேவையை மேற்கொள்வதற்காக அங்கு சென்றிருந்தேன். கிளிநொச்சியில் அமைந்துள்ள "அன்னை இல்லம்" என்ற அமைப்பின் ஊடாக இந்த சேவையை மேற்கொண்டுவந்த வேளையில், அங்கு சிறுவர் உரிமைகளுக்கான திட்டம் ஒன்றின் ஊடாக பணியாற்றிக் கொண்டிருந்த கனடிய நிறுவனம் ஒன்றுடனும் இணைந்து வேலை செய்யும் சந்தர்ப்பம் கிட்டியது.

அந்த அமைப்பின் ஊடாகப் பணிபுரிவதற்கு கொழும்புக்கு வரவேண்டியிருந்து. கொழும்பிலிருந்து வடக்கு, கிழக்கு பிரதேசங்கள் அனைத்துக்கும் பயணம் செய்து பணிபுரியவேண்டிய வேலைகள் எனக்கு ஒதுக்கப்பட்டன. மட்டக்களப்பு - அம்பாறை பிரதேசங்களில் அதிகம் சென்று பணிபுரியவேண்டியிருந்து.

மூன்று மாதங்கள் மாத்திரம் சேவை செய்வதற்காக சிறிலங்காவுக்கு சென்ற எனது பயணம் இரு வருடங்களாக நீண்டது.

ஆஸ்திரேலயாவுக்கு வந்தபின்னரும் தொடர்ந்து சமூக சேவையை மேற்கொண்டு வந்த செயற்பட்டாளராக பணி புரிந்த நான், அதன் தொடர்ச்சியாக அரசியலில் காலடி எடுத்து வைத்துக்கொண்டேன்.

**கேள்வி: உங்களது பாதையை பின்பற்ற விரும்புகின்ற இளையவர்களுக்கு நீங்கள் கூறக்கூடிய ஆலோசனை என்ன? அல்லது வழிமுறைகள் என்ன?**

பதில்: உங்களுக்கு ஆர்வமுடைய துறையை தேர்ந்தெடுப்பது என்பது மிக முக்கியமானது. பின்னர், அதனை மனப்பூர்வமாக பின்பற்றுவது என்பது மிக மிக முக்கியமானது. எந்தத் துறையாக இருந்தாலும் இந்த அணுகுமுறை அத்தியாவசியமானது. நீங்கள் நேசிக்கும் துறையின் மீது நீங்கள் முதலிடுகின்ற நேரமும் உழைப்பும்தான் உங்களை அந்தத் துறையில் வித்தியாசமானவராக அடையாளம் காண்பிக்கிறது.

குறிப்பாக அரசியல் என்று வரும்போது நீங்கள் முன்பு குறிப்பிட்டதைப்போல பல இடர்பாடுகள் - இடைஞ்சல்கள் வரலாம். சிலவேளைகளில் வராமலும் போகலாம். ஆனால், உங்களைப் பொறுத்தவரை அப்படிப்பட்ட தடைகள் உள்ளதாக உங்களுக்குள் நீங்களே நினைத்துக்கொண்டிருப்பீர்கள். ஏனெனில், பல்வேறு சமூகக் கட்டமைப்புக்களுடன் இணைந்து நீங்கள் பணிபுரியும்போது அதற்கான வாய்ப்புக்கள் அதிகமாகிறது. அப்படிப்பட்ட சூழ்நிலையை ஏற்றுக்கொள்ளும் மனப்பக்குவத்தை வளர்த்துக்கொள்வதும் அவற்றை எதிர்கொள்ளும் மனத்திறனும் இங்கு மிக மிக முக்கியம்.

**கேள்வி: இறுதியாக, உங்களது புதிய தலைமைத்துவத்தின் கீழ் உங்களது பணிகள் எவ்வாறு வித்தியாசமாக அமையப்போகின்றன? குறிப்பாக தமிழ் மற்றும் ஏனைய சிறுபான்மை இனங்கள் இந்த நாட்டில் பாராதூரமாக எதிர்கொண்டுவரும் அகதிகள் பிரச்சினை நாளுக்குநாள் திகிலடையச் செய்கிறது. அகதிகளாக அங்கீகரிக்கப்பட்ட பல நூற்றுக்கணக்கானவர்கள் இந்தோனேஷிய தடுப்பு முகாம்களில் கொடுமையான வாழ்க்கையை வாழ்ந்து கொண்டு வருகிறார்கள். மானஸ் தீவுகளில் கடந்த இரண்டு மாதங்களில் இரண்டு இளைஞர்கள் தற்கொலை செய்து கொண்டுள்ளார்கள். இவை தொடர்பில் நீங்கள் கைக்கொள்ளப்போகும் புதிய நகர்வுகள் ஏதாவது?**

பதில்: பசுமை கட்சியொன்றுதான் இன்று மானஸ் தீவு அகதிகள் பற்றியோ ஆஸ்திரேலியா அகதிகள் குறித்த எந்த விடயத்தையும் துணிச்சலாக பேசுகின்ற ஒரே ஒரு அமைப்பாக உள்ளது. ஏனைய தரப்புக்கள் மிகப்பெரிய அளவில் இந்த விடயங்களிலிருந்து தங்களை தூர நிறுத்தி வைத்துக் கொள்கிறார்கள். அசட்டையாக கடந்து செல்கிறார்கள். தங்களது தார்மீகப் பொறுப்பிலிருந்து வேண்டுமென்றே தவறுகிறார்கள்.

எங்களது மனக்கண்களைத் திறந்து எங்களின் முன்னால் பரந்து கிடக்கின்ற மிகப்பெரிய பொறுப்பை ஏற்றுக்கொள்ள வேண்டிய கட்டாயத்தில் உள்ளோம் என்பதை ஆஸ்திரேலிய அரசியல் தரப்பினர் மறுத்துக்கொண்டே வருகிறார்கள்.

இவற்றுக்கு எதிராக பசுமை கட்சி தொடர்ந்து குரல் கொடுக்கும். செயல் வழியாக புதிய பாதைகளைத் திறக்கும். அகதிகள் விவகாரத்தில் எமது தொடர்ச்சியான அர்ப்பணிப்பு மிக்க சேவைகளை கட்சியின் சகல கட்டமைப்புக்களின் ஊடாகவும் மேற்கொண்டு வருகிறோம். சந்திப்புக்களில் நான் தொடர்ந்து கலந்துகொண்டு வருகிறேன்.

பசுமை கட்சியொன்றுதான் ஆஸ்திரேலிய மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வுகளை நேர்மையாக அணுகக்கூடிய ஒரே தரப்பு. இது உண்மை.

- என்று உறுதியாக கூறினார்.

இன்னும் நூறு கேள்விகளை கேட்டால்கூட அருவி போல பதில் சொல்லிக்கொண்டேயிருந்திருப்பார். அவ்வளவு லாவகமும் நிதானமும் அவரது பதில்களில் தெரிந்தது.

அந்தச் பச்சைத் தமிழிச்சிக்கு வாழ்த்துக்களைக் கூறிக் கொண்டு மீண்டும் சந்திப்போம் என்று கைலாகு கொடுத்து விட்டு பெருமையோடு திரும்பினோம்.

● **மெல்பேர்ணிலிருந்து தெய்வீகன்**

# கவிழ்ந்தது இந்தியா!






யாழ்ப்பாணம், நவ.05

நியூஸிலாந்துக்கு எதிரான இரண்டாவது ரி-20' போட்டியில் இந்திய அணி 40 ஓட்டங்கள் வித்தியாசத்தில் தோல்வியடைந்தது.

இந்தியா சென்றுள்ள நியூஸிலாந்து அணி 3 போட்டிகள் கொண்ட ரி-20' தொடரில் பங்கேற்கிறது. முதல் போட்டியில் இந்திய அணி வெற்றி பெற்றது. இரண்டாவது போட்டி குஜராத் மாநிலம் ராஜ்கோட்டில் நேற்று நடந்தது. நாணயச் சுழற்சியில் வென்ற நியூஸிலாந்து முதலில் துடுப்பெடுத்தாடியது. இந்திய அணியில் வேகப்பந்துவீச்சாளர் முகமது சிராஜ் அறிமுக வாய்ப்பு பெற்றார்.

நியூஸிலாந்து அணிக்கு மார்ட்டின் குப்டில், மன்ரோ இணை சிறப்பான அடித்தளமிட்டது. குப்டில் 45 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார். சிராஜ் பந்தில் வில்லியம்சன் (12) அவுட்டானார். அதிரடியாக விளையாடிய மன்ரோ ரி-20' அரங்கில் இரண்டாவது சதம் கடந்தார். நியூசிலாந்து அணி 20 ஓவரில் 2 விக்கெட் இழப்புக்கு 196 ஓட்டங்கள் எடுத்தது. மன்ரோ (109), டாம் புரூஸ் (18) ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

197 எனும் கடின இலக்கை விரட்டிய இந்திய அணிக்கு பவுல்ட் தொல்லை கொடுத்தார். இவரது வேகத்தில் தவான் (1), ரோகித் (5) சிக்கினர். ஸ்ரேயாஸ் ஐயர் 23 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார். ஹர்திக் பாண்டியா ஒரு ஓட்டத்தோடு திரும்பினார். ஆயினும் மறுமுனையில் கோஹ்லி எதிரணிப் பந்துவீச்சை சிதறடித்தார். அரைச்சதம் கடந்த இவர் 65 ஓட்டங்களில் ஆட்டமிழக்க, இந்திய ரசிகர்கள் நம்பிக்கையை இழந்தனர். அக்சர் (5) ஒற்றை இலக்கில் திரும்பினார். தோனி (49) அரைச்சத வாய்ப்பை இழந்தார். இறுதியில் இந்திய அணி 20 ஓவரில் 7 விக்கெட் இழப்புக்கு 156 ஓட்டங்கள் மட்டும் எடுத்து தோல்வியடைந்தது.

இதன் மூலம், தொடர் 1-1 என சமநிலையை எட்டியது. மூன்றாவது மற்றும் கடைசிப் போட்டி வரும் 7 ஆம் திகதி கேரளா மாநிலம் திருவனந்தபுரத்தில் நடைபெறவுள்ளது. (அ)

## அப்படிப்பட்ட ஆள் நான் இல்லை



ஆஸ்திரேலிய அணித் தெரிவில் நான் தலையிடுகிறேன் என்ற குற்றச்சாட்டை என்னால் ஏற்றுக்கொள்ள முடியாது என அந்த அணியின் தலைவர் ஸ்மித் தெரிவித்துள்ளார்.

ஆஸ்திரேலியக் கிரிக்கெட் அணியின் தலைவர் ஸ்ரீபன் ஸ்மித், அணித்தேர்வில் தலையிடுகிறார் எனவும், தனக்குப் பிடித்தமான வீரர்களுக்குக் களம் காணும் அணியில் வாய்ப்புக் கொடுக்கிறார் எனவும் சில முன்னாள் வீரர்களும், ஊடகத்தினரும் விமர்சித்து வருகிறார்கள்.

இது குறித்து ஸ்ரீபன் ஸ்மித் கூறுகையில்,

"எனக்குப் பிடித்தமானவர்களை அணிக்குத் தெரிவு செய்வதாகக் கூறுவது அடிப்படை ஆதாரமற்ற குற்றச்சாட்டு. எவரும் எதை வேண்டுமானாலும் சொல்லலாம். அதுபற்றி எனக்குக் கவலையில்லை. அதேசமயம் எனது பார்வையில் சில விடயங்களைத் தேர்வாளர்களிடம் சொல்வேன்'" என்றார். (ஐ)



## விலகினார்

பரிஸ் மாஸ்டர்ஸ் சர்வதேச டென்னிஸ் தொடரின் காலிறுதியில் நேற்று முன்தினம் மோத வேண்டியிருந்த நிலையில் காயம் காரணமாக நடால் விலகியுள்ளார்.

பரிஸ் மாஸ்டர்ஸ் சர்வதேச டென்னிஸ் தொடர் பிரான்ஸில் நடந்து வருகிறது. இதில் முதல் நிலை வீரரான ஸ்பெயினின் ரபெல் நடால், காலிறுதியில் செர்பியாவின் பிலிப் கிராஜினோவிச்சுடன் நேற்றுமுன்தினம் மோதுவதாக இருந்தது.

ஆனால் கடைசி நேரத்தில் அவர் போட்டியிலிருந்து விலகி விட்டார். வலது கால் முட்டியில் காயம் ஏற்பட்டிருப்பதால், இந்தப் போட்டியிலிருந்து வேதனையுடன் விலகுவதாகக் கூறிய நடால், அடுத்துவரும் உலக இறுதி சுற்று ஆரம்பிப்பதற்குள் உடல்தகுதியை எட்டிவிடுவேன் என்றும் தெரிவித்தார். (ஐ)

உங்கள் துயரில் பங்கெடுக்கவும்,
உறவுகளுக்கு அறிவிக்கவும்

- மரண அறிவித்தல்
- நினைவஞ்சலி
- கண்ணீர் அஞ்சலி

கட்டணம் இன்றி பிரசுரிக்க

இன்றே தொடர்பு கொள்ளுங்கள்

எதிரொலி Ethiroli

021 3004848

நிபந்தனை களுக்குட்பட்டது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை சிவஞானம் ஜெயானந்தனால் பருத்தித்துறை வீதி, 5ஆம் கட்டை, கோப்பாய் மத்தி, கோப்பாய் என்ற முகவரியிலுள்ள நாவலர் அச்சகத்தில் 05.11.2017 அன்று அச்சிட்டு வெளியிடப்பட்டது.